## ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான சீயோன் குடும்பத்தினரே !

மீட்பர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"நமக்கொரு பாலகன் பிறந்தார்".

இவ்வுலகின் பாவ இருள் நீக்க தம்மையே மானுடனாக்கிய படைப்பாளராம் கடவுளின் திருவுளம் வெளிப்பட்ட பண்டிகைதான் கிறிஸ்து பிறப்பின் பண்டிகை ஆகும். கடவுள் தம்மையே மனுமைந்தனாக கொடுத்து நம்மை மீட்டு மகிழ்வித்தது போல நாமும் பிறரை மகிழ்விக்கவே இத் திருநாள் நம்மை அழைக்கின்றது.

உள்ளத்தில் மகிழ்ச்சி உடையவரே பிறருக்கு மகிழ்ச்சி தருவார் நம் உள்ளம் மகிழ்வுடன் இருக்க உள்ளொளி தேவை.

எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கின்ற மெய்யான ஒளி அவரே.

அந்த ஒளியே நம்பிக்கை அருளும் இயேசு பாலகனாக உதித்தார். ஆதியில் இருந்த வார்த்தை, படைப்பனைத்தையும் உருவாக்கிய வார்த்தை தன்னையே மனிதனாக உருவாக்கிக் கொண்டது. எதற்காக என்றால் நம்மை இருளின் பிடியிலிருந்து மீட்டுருவாக்கம் செய்யவே!

இறைச் சாயலில் படைக்கப்பட்ட மனுக்குலம் தன் மாண்பை இழந்து அவநிலையில் இருப்பதை மாற்றிடவே மானுட மகனாய் கடவுள் பிறந்தார். நம்மை புதுப்பிக்கும் மீட்பராக தம்மை இழக்கவே அவர் திருவுள சித்தம் கொண்டார். பாவத்தை ஒழிக்க பாவத்தின் சம்பளமாம் மரணத்தை ஜெயிக்க தம்மை வெறுமையாக்கினார் நம் இறைவன்.

எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியும், புதுவாழ்வும் அளித்திட திருச்சபை குடும்பங்கள் முன்வர கடவுள் அழைக்கிறார் என்ற சாட்சி திருச்சபையாக வாழ அழைக்கப்படுகிறோம்.

இந்த கிறிஸ்து பிறப்பின் நாட்களிலும் எதிர்வரும் 2026 புத்தாண்டிலும் கடவுளின் பேரருள் உங்களைத் தாங்கி வழிநடத்திட இறை வேண்டலுடன் உங்கள் அனைவரையும் வாழ்த்தும்

இவண்
**ஆயர் Rev. J. ராஜா.ஃப்ரீமேன்**
**ஆயரம்மா பியூலா எஸ்தர் மற்றும் பிள்ளைகள்**

# இனிய
# கிறிஸ்துமஸ்
# வாழ்த்துக்கள்

# இவரே பெருமான்

அனைவருக்கும் ஸ்தோத்திரம்!

பாலகன் இயேசுவின் அன்பு, இருள் சூழ்ந்த உலகத்தில் பல்லாயிர ஆசைகள், கனவுகள், நினைவுகளுடன் வாழும் மனிதனின் இல்லத்தின் தலைவராய் இருக்க உதித்தவரே நமது இதய கமலன் இயேசு பாலகனாய் உதித்த ஆதவன் இயேசு கிருபையின் நிழலாய் நமக்கென்று செவ்வையான தமது தூய வழியினை அவரது பரிபூரணத்தினால் நம் எல்லோருக்கும் கட்டளையிட்டு நமது இரட்சண்ய கொம்பாக திகழ்கிறார்.

வார்த்தையாகிய கடவுளின் ஆசி பெற்ற பிரியமான நேசகுமாரனும், பிதாவுக்கு ஒரே பேறான நேசகுமாரனும், பிதாவுக்கு ஒரே பேறானவருடைய ஏற்ற மகிமையால் அனுதினமும் நம்மோடிருக்கும் இம்மானுவேலராக, கன்னிமரியின் பாலகனாய் ஏழை மனு உருவேற்று ஒருவரும் ஒருபோதும் காணாத கடவுளை நமக்குள் நிலைத்திருக்கச் செய்ய, கடவுளின் அன்பை நமக்கு வெளிப்படுத்தி தந்தருளினதினால் உருவானது தான் இந்த கிறிஸ்துமஸ்.

கிறிஸ்து பிறப்பினால் நாம் பெற்ற கடவுளின் பரிபூரணமான அன்பை பூரணமாய் ருசிபார்த்து பிறருக்கும் அச்சுவையினை பகிர்வதே கிறிஸ்துமஸ். இதை உணர்ந்து தேனிலும், மதுரமான இறைவனின் அன்பை நம் அனைவரின் உள்ளத்திலும், இல்லத்திலும் பிறக்க இடமளிப்போம். கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

இறைப்பணியில்
**ஆயரம்மா**
**பியூலா எஸ்தர்**

## கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வுகள்

★ **07.12.2025 ஞாயிறு** காலை 8.00 மணி வழிபாடு வெகுமதி ஞாயிறாக அனுசரிக்கப்படும் மற்றும் ECUMENICAL கிறிஸ்மஸ் கீத வழிபாடு நடைபெறும்.

★ **07.12.2025 ஞாயிறு** 6.30 மணிக்கு சிறுவர் ECUMENICAL வழிபாடு நடத்தப்படும்.

★ **14.12.2025 ஞாயிறு** காலை 8 மணி வழிபாட்டில் அனைத்து ஐக்கிய சங்கங்கள் கீத ஆராதனை நடைபெறும்.

★ **14.12.2025 ஞாயிறு** காலை வழிபாடு முடிந்தவுடன் நமது சபையை சார்ந்த ஏழைகளுக்கு உடை 12.00 மணிக்கு வழங்கப்படும்.

★ **14.12.2025 ஞாயிறு** அன்று மாலை 6.30 மணிக்கு நமது சீயோன் ஆலயத்தின் 178–ஆம் ஆண்டு நிறைவு விழா, நன்றி ஏறெடுப்பு வழிபாடு நடைபெறும். தொடர்ந்து ஐக்கிய விருந்து நடைபெறும்.

★ **20.12.2025 சனிக்கிழமை** மாலை 7 மணிக்கு நமது சபை சார்பாக நற்செய்தி பணித்தளங்கள், பம்பிங் ஸ்டேஷன், சத்தியா நகர், ஐஸ் அவுஸ், ரிச்சித்தெரு, பகுதி மக்களுடன் சத்தியநாதன் ஹாலில் ஆலய வளாகத்தில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்படும்.

★ **21.12.2025 ஞாயிறு** அன்று காலை 8 மணிக்கு ஆலய பாடகர் குழு வழிபாடு நடைபெறும்.

★ **21.12.2025 ஞாயிறு** பிற்பகல் 3.00 மணிக்கு ஓய்வுநாள் பிள்ளைகளின் கிறிஸ்மஸ் சிறுவர் விழாவும் அதை தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு கேம்ஃபயர் நடைபெறும்.

★ **25.12.2025 வியாழன்** அதிகாலை 4.30 மணிக்கு கிறிஸ்மஸ் வழிபாடும், பிறகு 8.00 மணிக்கு 2ம் வழிபாட்டில் திருவிருந்து மற்றும் திருமுழுக்கு நடைபெறும். மாலை 6.00 மணிக்கு வழிபாடு இருக்காது.

★ **28.12.2025 ஞாயிற்றுக்கிழமை** காலை 8.00 மணிக்கு சாட்சியின் ஞாயிறாக அனுசரிக்கப்படும். அன்று குடும்பமாக திருச்சபையார் பாடல் வாயிலாகவும், வசனத்தின் மூலமாகவும் சாட்சிப் பகிர்ந்து கொள்ளவும்.

★ **31.12.2025 புதன்கிழமை** அன்று காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை சங்கிலி தொடர் ஜெபத்திற்கு உங்களை வரவேற்கிறோம். அதற்கு உங்கள் நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்யவும் தங்கள் பெயர்களை செயலரிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகீறீர்கள்.

★ **31.12.2025 புதன்கிழமை** இரவு 11.30 மணிக்கு பழைய வருட வழிபாடும், 01.01.2026 12.00 மணிக்கு புதிய வருட திருவிருந்து வழிபாடும் காலை 8.00 மணிக்கு புதுவருட இரண்டாம் வழிபாடும் நடைபெறும்.

## சபையாரின் நினைவிற்கு

1. இவ்வாண்டு நமது திருச்சபையின் ஐக்கிய சங்கங்கள் குழுக்களாக Carol Rounds அனைத்து இல்லங்களையும் சந்திக்க உள்ளார்கள் அவர்களை வரவேற்று உற்சாகப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

2. ஏழைகளுக்கு பரிசளிக்க கிறிஸ்மஸ் சிறப்பு காணிக்கை கவர் மூல்மாக நன்கொடை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

3. இவ்வாண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து ஆசீர்வதித்து வழிநடத்தின ஆண்டவருக்கு நன்றி படைக்கும் வண்ணம், ஒரு நாள் ஊதியத்தை காணிக்கையாக படைப்போம். அதற்கான உறைகளை புத்தாண்டு வழிபாட்டில் (01.01.2026) அன்று படைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்..

## கிறிஸ்மஸ் பாடகர் குழுக்கள் இல்லங்களை சந்திக்கும் ஒழுங்குமுறை – 2025

| நாள் | சந்திக்கும் பகுதிகள் | குழுவும் பொறுப்பாளர்களும் |
|---|---|---|
| 01.12.2025<br>திங்கள் | ஆயர் இல்லம், ஆர்ம்ஸ் ரோடு, ஆஸ்பிரின் கார்டன், T.P. சத்திரம், செக்ரட்டேரியட் காலனி, கெல்லீஸ், அயனாவரம், வில்லிவாக்கம், பெரம்பூர், அண்ணா நகர், அம்பத்தூர், கொளத்தூர், புழல், ஏகாங்கிபுரம் | பெண்கள் ஐக்கிய சங்கம்<br>**திருமதி. பியூலா எஸ்தர் ஆயரம்மா**<br>**திரு. பேன்சி ரெபேக்கா**<br>**திருமதி. சாரதா** |
| 02.12.2025<br>செவ்வாய் | தேனாம்பேட்டை, நந்தனம், ஆதம்பாக்கம், உள்ளகரம், வேளச்சேரி, பெருங்குடி, துரைப்பாக்கம், காரப்பாக்கம் | சேகரக்குழு<br>**திரு. செல்வராஜ்**<br>**திரு. அகஸ்டின் தங்கராஜ்** |
| 03.12.2025<br>புதன் | ஆலய வலதுபுறம், அருணாச்சலம் தெரு, சாமிநாயக்கன் தெரு, ஐய்யா முதலி தெரு, முக்கியம்மன் தெரு, கூவம் சாலை, காக்ஸ்கொயர், பழனி ஆண்டவர் தெரு | வாலிபர்கள் ஐக்கிய சங்கம்<br>**ஸ்வேத்தா** |
| 04.12.2025<br>வியாழன் | ஆலய முன்புறம், சிங்கன்ன தெரு, கரீம் மொய்தீன் தெரு, குட்டித் தெரு, குருவப்பதெரு, நைனியப்பா தெரு, நாதமுனி தெரு, சாமிநாயக்கன் தெரு, கலவை தெரு, தர்மராஜா கோவில் தெரு, அருணாச்சலம் தெரு | நற்செய்திக் குழு<br>**திரு. குணாளன்** |
| 05.12.2025<br>வெள்ளி | புதுப்பேட்டை, நரியங்காடு, கிரீம்ஸ் ரோடு, எக்மோர், சேத்துப்பட்டு, போலீஸ் குவார்ட்ரஸ், ஹாரிங்டன் ரோடு | ஓய்வுநாள் பள்ளி<br>**திருமதி. அருணா ஸ்டீபன் குழு** |
| 09.12.2025<br>செவ்வாய் | நுங்கம்பாக்கம், அரும்பாக்கம், MMD காலனி, கோயம்பேடு, மதுரவாயல், பூந்தமல்லி, ஐயப்பன்தாங்கல், காட்டுப்பாக்கம், இராமாபுரம், பல்லாவரம், தாம்பரம், கூடுவாஞ்சேரி. | ஆண்கள் ஐக்கிய சங்கம்<br>**திரு. பிலமோன்,**<br>**திரு. பெர்னாண்டோ** |
| 10.12.2025<br>புதன் | சத்தியா நகர், ஆர்மி குவாட்ரஸ், திருவொற்றியூர், பிராட்வே புரசைவாக்கம், வேப்பேரி, மூலக்கடை மாதவரம் கொடுங்கையூர் | வாலிபர்கள் ஐக்கிய சங்கம்<br>**செல்வி. சுபேகா** |
| 11.12.2025<br>வியாழன் | ஆலயத்திற்கு பின்புறம், கபாலமூர்த்தி தெரு, சிங்கன்னத் தெரு, வெங்கேடசகிராமணி தெரு, கிழக்கு கூவம் சாலை | அனைத்து ஐக்கிய சங்கம்<br>**திரு. டேனியல் மங்கள்ராஜ்**<br>**திரு. பால் ராஜேந்திரன்** |
| 12.12.2025<br>வெள்ளி | சூளைமேடு, கோடம்பாக்கம், கே.கே.நகர், வடபழனி, ஈக்காட்டுத்தாங்கல், விருகம்பாக்கம், வளசரவாக்கம் | பாடகர் குழு<br>**திரு. செல்வகுமார்**<br>**திரு. ஷியாம்குமார்** |
| 15.12.2025<br>திங்கள் | பம்பிங் ஸ்டேஷன், சிவபிரகாசம் தெரு, ஆதிகேசவலு தெரு, நரசிங்கபுரம், ரிச்சி தெரு | நற்செய்தி பணி<br>**திரு. ஐசக், திரு. துரை ராஜ்** |
| 16.12.2025<br>செவ்வாய் | திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, ஐஸ்அவுஸ், தீயணைப்புக் காலனி, ஆர்.கே. சாலை, அடையாறு, திருவான்மியூர் | வாலிபர் குழு<br>**திரு. அசரியா எபினேசர்,**<br>**திரு. மில்டன்** |

## டிசம்பர் 2025 மற்றும் ஜனவரி 2026 ஆராதனை ஒழுங்கு

| நாள் | நேரம் | ஆராதனைகள் | செய்தியாளர் |
|---|---|---|---|
| 01.12.2025<br>திங்கள் | காலை 6.30 | திருவிருந்து<br>கடவுளின் கனிவான செயல்கள் | **ஆயர் அருள்திரு. J. இராஜா ஃப்ரீமேன்** |
| 07.12.2025<br>ஞாயிறு | காலை 8.00<br><br><br><br>மாலை 6.00 | **<u>வெகுமதி ஞாயிறு</u>**<br>தலைப்பு : இறை வார்த்தை சமகாலத்திற்கு அறைகூவல்<br>2 இராஜா. 22: 1–13, எபிரே. 4: 12–16, சங். 119: 33–40, லூக்கா. 1: 67–80<br>சிறுவர் Ecumenical வழிபாடு | **ஆயர்** |
| 14.12.2025<br>ஞாயிறு | காலை 8.00 | தலைப்பு : அச்சத்தின் பிடியிலிருந்து விடுதலை<br>யோசுவா. 1: 1–9, 1 யோவான் 4: 13–21, சங்கீ 27, மத்தே. 1: 18–25 | **ஆயர்** |
| 14.12.2025<br>ஞாயிறு | மாலை 6.30 | **178–ஆம் ஆண்டு ஆலய ஆண்டு விழா வழிபாடு**<br>திருவிருந்து மற்றும் அன்பின் விருந்து | **ஆயர்** |
| 21.12.2025<br>ஞாயிறு | காலை 8.00<br><br><br><br>மாலை 3.00 முதல் | **<u>ஆலய பாடகர் குழு ஞாயிறு</u>**<br>தலைப்பு : காத்திருப்பில் வாழ்வு<br>ஏசா. 2: 2–5, வெளி. 22: 10–21, சங்கீ. 27, லூக்கா. 12: 32–40<br>கிறிஸ்மஸ் மர விழா மற்றும் கேம்ப்ஃபயர் | **ஆயர்**<br><br>**ஆயர்** |

| | | | |
|---|---|---|---|
| 25.12.2025<br>வியாழன் | காலை 4.30<br><br><br>காலை 8.00 | தலைப்பு : வழிகாட்டும் நம்பிக்கையான ஒளி கிறிஸ்துவே<br>ஏசாயா. 9: 1–7, தீத்து 3 : 4–7,<br>சங்கீதம். 96, மத். 2: 1–12<br>இரண்டாம் வழிபாடு<br>திருமுழுக்கு – திருவிருந்து | **ஆயர்**<br><br><br><br>**ஆயர்** |
| 28.12.2025<br>ஞாயிறு | காலை 8.00<br><br><br><br>மாலை 6.00 | <u>**சாட்சியின் ஞாயிறு**</u><br>தலைப்பு : வன்முறையற்ற சரணாலயம் குடும்பம்<br>ஆதி. 50: 15–21, கொலோ. 3: 12–17,<br>சங். 133:, லூக். 15: 11–32<br>மாலை திருவிருந்து ஆராதனை | **திரு. ஷியாம் குமார்**<br><br><br><br>**திரு. ஸ்டீபன்** |
| 31.12.2025<br>புதன் | காலை 7.00 | சங்கிலித் தொடர் ஜெபம்<br>காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை | **சபையார்** |
| 31.12.2025<br>புதன்<br>01.01.2026<br>வியாழன் | இரவு 11.30<br><br>12.00 மணி<br><br>காலை 8.00 | பழைய வருட வழிபாடு<br><br>புதிய வருட வழிபாடு<br>திருவிருந்து வழிபாடு<br>புதிய வருட இரண்டாம் திருவிருந்து வழிபாடு | **ஆயர்**<br><br><br><br>**ஆயர்** |